## பொருட்சுருக்கம்

பள்ளிக் கல்வி - பகுதி II திட்டம் – 2005-2006 – மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தர உறுதிக்கு மெட்ரிகுலேசன் பள்ளிகள் முதல்வர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (எக்ஸ்.2)துறை**

அரசாணை (நிலை) எண்.78
நாள் 16.5.2005

படிக்கப்பட்டவை

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடித ந.க. எண்.8000/ E8/2004, நாள் 5.1.2005.

***

ஆணை:

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், படிக்கப்பட்ட கடிதத்தில், 2005-2006-ம் கல்வியாண்டு முதல் மெட்ரிகுலேசன் பள்ளி பாடத் திட்டத்தினை படிப்படியாக மாற்றம் செய்து அரசு ஆணையிட்டுள்ளதன் அடிப்படையில் மெட்ரிக் பள்ளி ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அவசியமாகிறது என்றும், சுயநிதி அடிப்படையில் செயல்பட்டு வருவதால் மெட்ரிக் பள்ளிகள் ஆசிரியர் பணியிடைப் பயிற்சி அளிக்க முன்வராதநிலை உள்ளது என்றும், எனவே, பள்ளி முதல்வர்கள் பள்ளி முன்னேற்றத்தில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டிட வழிவகை செய்தல், பள்ளியில் முழுமையான கல்வி வழங்கிட ஆசிரியர்களை ஈடுபாட்டுடன் பணியாற்றச் செய்யும் சூழலை ஏற்படுத்திட வழிவகை செய்தல் மற்றும் கற்பித்தல் சூழலுக்கும் தற்போதைய சூழலுக்கும் ஏற்றவாறு மாணவர்களைத் தயார் செய்தல் போன்ற நோக்கங்களுடன் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து மெட்ரிகுலேசன் பள்ளி முதல்வர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்க 2005-2006 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் தொடராச் செலவில் ரூ.7,00,000/- மதிப்பீட்டிற்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

2. மெட்ரிகுலேசன் பள்ளி முதல்வர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்கும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயற்குறிப்பினை, 2005-2006 பகுதி II திட்டத்தின் கீழ், ஆய்வு செய்து, ஏற்று, இத்திட்டத்தினைச் செயல்படுத்திட

தொடராச் செலவினமாக ரூ.7,00,000/- (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) அரசு அனுமதித்து ஆணையிடுகிறது.

3. இத்திட்டத்திற்காக மேலே பத்தி 2-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத் தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 - பொதுக் கல்வி 02. இடைநிலைக்கல்வி 001 நெறிபடுத்தலும் நிருவாகமும் - I - திட்டத்தில் சேராதது - AC. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம்-நிர்வாகம்- 72 பயிற்சி" (த.தொ.கு. 2202 02 001 AC.7203)

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.22497/கல்வி.II2005, நாள் 26.4.2005-ல் வழங்கப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை - 6
மாநில கணக்காய்வுத் தலைவர் (எ & இ), சென்னை 18 (பெயரில்)
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I), சென்னை 18
சம்பள கணக்குஅலுவலர், சென்னை 35

நகல்

நிதித்(BG II/கல்வி.II) துறை சென்னை 9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்